நடந்து வந்த பாதைதன்னை திரும்பிப் பாரடா
நீ நாசவேலை செய்த பின்னர் வருந்துவாயடாஸ *(2)*
அடர்ந் காட்டில் எரியும் தியாக நெருப்புத்தானடா
உனை ஆட்டுகின்ற சக்தியோடு எரிக்கும் தானடா *(2)*

எதிரி காலில் ஏறி நின்று செருப்பு ஆகினாய்
தமிழீழ மண்ணை எண்ணை ஊற்றி நெருப்பு மூட்டினாய்ஸ *(2)*
கதிரை ஏறும் ஆசை கொண்டு விலையுமாகினாய் *(2)*
நம் களத்து வீரர் போகும் போது தலையுமாட்டினாய் தலையுமாட்டினாய்

நடந்து வந்த பாதைதன்னை திரும்பிப் பாரடா

தம்பிமாரை கொன்றவர்க்கு வாழ்த்துப் பாடினாய்
உன் தங்கை கற்பைத் தின்றவர்க்கு மாலை சூடினாய்ஸ *(2)*
நம்பி நின்ற எங்களிற்கு நஞ்சை ஊட்டினாய் *(2)*
புலிக் காளை வரும் அந்த நேரம் கம்பி நீட்டுவாய் கம்பி நீட்டுவாய்

நடந்து வந்த பாதைதன்னை திரும்பிப் பாரடா

வீதி எங்கும் சாவினோடு மக்கள் ஓடுறார்
புலி வீரர் நின்று எதிரியோடு யுத்தமாடுறார்ஸ *(2)*
நீதியற்ற பகைவனோடு கூட்டம் போடுறாய் *(2)*
அவன் நீட்டுகின்ற பதவியேற்று ஆட்டமாடுறாய் ஆட்டமாடுறாய்

நடந்து வந்த பாதைதன்னை திரும்பிப் பாரடா

பெற்றதாயை விற்றுக் காசு பிழைக்கும் பேர்வழி
நீ போகும் போது எந்த நாளும் இல்லை நேர்வழிஸ *(2)*
அற்புதங்கள் நாளை தமிழீழம் காணுவார் *(2)*
எம் அண்ணன் வந்து உங்களிற்குத் தீர்ப்புக் கூறுவார் தீர்ப்புக் கூறுவார்

நடந்து வந்த பாதைதன்னை திரும்பிப் பாரடா
நீ நாசவேலை செய்த பின்னர் வருந்துவாயடாஸ *(2)*
அடர்ந் காட்டில் எரியும் தியாக நெருப்புத்தானடா
உனை ஆட்டுகின்ற சக்தியோடு எரிக்கும் தானடா *(2)*